**தமிழாக்கம் செய்யப்பட்ட**
**அரசாணை**

**சுருக்கம்**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை – 1969 ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டம் – 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள், விதி எண்.9(3)–இல் திருத்தம் – ஆட்கொணர்வு மனு எண்.3043/2014–இல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் 13.04.2017–ஆம் நாளிட்ட உத்தரவு – காலதாமதமாக பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மீது ஆணை வெளியிடுதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**வருவாய் நிருவாக அலகு, வ.நி.3(2) பிரிவு**

**அரசாணை (நிலை) எண்.324.**

**நாள்: 28.06.2023,**
**சோபகிருது வருடம், ஆனி 13,**
**திருவள்ளுவர் ஆண்டு 2054,**
**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.293, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்: 02.12.2016
2. ஆட்கொணர்வு மனு எண்.3043/2014 –இல் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய 15.07.2016 மற்றும் 13.04.2017 நாளிட்ட உத்தரவுகள்.
3. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.RA5(1)/927/2015, நாள்: 18.02.2019.
4. அரசுக் கடித எண்.4532/RA–3(2)/2022–1, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள்: 09.02.2022.
5. கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.RA–5(1)/927/2015, நாள்: 28.06.2022.
6. அரசுக் கடித எண்.4532/RA–3(2)/2022–3, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்: 05.05.2023.

........

**ஆணை:**

மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள், ஆட்கொணர்வு மனு எண்.3043/2014–இல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளின்படி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, 2000–ஆம் ஆண்டு தமிழ்நாடு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு விதிகள், விதி 9(3)ஐ திருத்தம் செய்து அரசாணை (நிலை) எண்.293, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (AB2) துறை, நாள் 02.12.2016–இல் ஆணை வெளியிட்டு அதன்படி, "முதல்நிலை நீதித்துறை மாஜிஸ்திரேட்டு/ பெருநகர மாஜிஸ்திரேட்டு" என்ற சொற்றொடருக்கு பதிலாக, "வருவாய் கோட்டாட்சியர் பதவிக்கு குறையாத

நிலையிலுள்ள நிருவாக நடுவர்கள்" என அறிவிக்கையிடப்பட்டு, இந்த ஆணை 25.01.2017 முதல் அமலுக்கு வந்தது என தெரிவித்துள்ளார். மேலும், அரசின் அறிவுறுத்தல்களுக்கிணங்க, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையுடன் 17.05.2018 அன்று கூட்டம் நடத்தப்பட்டது என்றும், அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, ஒரு வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் அரசுக்கு அனுப்பப்பட்டது என்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், காலதாமதமாக பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் தொடர்பாக, நிருவாக நடுவர்கள் பின்பற்றப்பட வேண்டிய திருத்திய வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் மீது தங்களது அறிக்கையை அனுப்பி வைக்கும்படி கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதன்படி, மறுப்புரைகளைப் பெறுவதற்கான காலஅளவை 30 நாட்களாகக் குறைத்தும், ஆதார் அட்டையை ஆதார ஆவணமாகச் சேர்த்துக் கொள்ளலாமென்றும், 1969-ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்பு பதிவு சட்டத்தின் 13(3)-ஆம் பிரிவின் கீழ் பிறப்பு மற்றும் இறப்புகளைத் தாமதமாகப் பதிவு செய்வது குறித்த வழிகாட்டு நெறிமுறைகளுக்குத் தேவையான உத்தரவுகளை பிறப்பிக்கலாம் என்று கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் தனதறிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. ஆட்கொணர்வு மனு எண்.3043/2014-இல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த 13.4.2017-ஆம் நாளிட்ட உத்தரவின் அடிப்படையிலும் மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துரு ஆகியவற்றை அரசு கவனமாகப் பரிசீலித்து, பரிசீலினைக்குப்பின் இவ்வரசாணையின் பிற்சேர்க்கையில் உள்ளவாறு காலதாமதமாக பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மீது ஆணை வெளியிடுதல் தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுகிறது.

4. காலதாமதமாக பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மீது ஆணை வெளியிடுதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள மேற்படி வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் பின்பற்றுமாறு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும், அரசால் பரிந்துரைக்கப்பட்ட நேர அட்டவணை மற்றும் சீராய்வு அட்டவணை சார்நிலை அலுவலர்களால் தவறாமல் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலும், காலதாமதமாக பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் தொடர்பாக பெறப்படும் விண்ணப்பம் மற்றும் பணிநிரவல் (Workflow) ஆகியவற்றை கையாளுவதற்கு இணையவழி செயலலகு (Online Module) ஒன்றை உருவாக்க, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஆணையர், சென்னை-2

அவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**குமார் ஜயந்த்,**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

**நகல்**

அரசு முதன்மைச் செயலாளர்,
மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் /
தலைமைப் பதிவாளர் பிறப்பு மற்றும் இறப்பு,
359, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 006.
ஆணையர்,
தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA),
807, அண்ணாசாலை, சென்னை–600 002.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [OP–II] துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
இருப்புக்கோப்பு/ உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**ஓம்/–**
**பிரிவு அலுவலர்**

**//உண்மை நகல்//**

நா.கவிதா
25/4/2024
**பிரிவு அலுவலர்**

25/4/24.

**அரசாணை (நிலை) எண்.324, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [வ.நி.3(2)] துறை, நாள்: 28.06.2023-இன் பிற்சேர்க்கை**

**நிகழ்வு ஏற்பட்டு ஓராண்டிற்குள் பதிவு செய்யப்படாத, காலதாமதமாகப் பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளின் மீது நிருவாக நடுவர் வாயிலாக ஆணையிடுவது (வருவாய் கோட்டாட்சியர் பதவி நிலைக்கு குறையாத) தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகள்**

இந்த வழிகாட்டு நெறிமுறைகள், நிகழ்வு ஏற்பட்டு ஓராண்டிற்குள் பதிவு செய்யப்படாத, காலதாமதமாகப் பதிவு செய்யப்பட்ட அனைத்து பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளின் மீது ஆணையிடுவதற்குப் பொருந்தும். ஆட்கொணர்வு மனு எண்.3043/2014-இல் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் 13.4.2017-ஆம் நாளிட்ட உத்தரவின்படி, 25.01.2017-க்கு பிறகு காலதாமதமாகப் பதிவு செய்யப்பட்ட பிறப்பு/இறப்பு பதிவுகளின் மீது நீதித்துறை / பெருநகர மாஜிஸ்திரேட்டு வாயிலாக ஆணையிடப்பட்ட யாதொரு உத்தரவும் செல்லாது. மேற்சொன்ன நாளிலிருந்து, அதிகாரவரம்புக்குட்பட்ட நிருவாக நடுவர்கள் என்ற நிலையில் உள்ள வருவாய் கோட்டாட்சியர்கள் வாயிலாக காலதாமதமாக செய்யப்படுகின்ற பதிவு மேற்கொள்ளப்படுகிறது. மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்யும் வகையில் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகிறது.

1. மனுதாரர், பிறப்பு அல்லது இறப்பு நிகழ்ந்த அதிகார வரம்பிற்குட்பட்ட வருவாய் கோட்டாட்சியரிடம், பிறப்பு அல்லது இறப்பை காலதாமதமாகப் பதிவு செய்வதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.
2. மனுதாரர் 25.01.2017-க்கு முன்னர் நீதித்துறை / பெருநகர மாஜிஸ்திரேட்டு பிறப்பித்த உத்தரவு நகலுடன் வருவாய் கோட்டாட்சியரை அணுகும்பட்சத்தில், வருவாய் கோட்டாட்சியர், ஏற்கெனவே பிறப்பித்த ஆணையின் மீது, நீதித்துறை / பெருநகர மாஜிஸ்திரேட்டு உத்தரவின் அடிப்படையில் விசாரணையின்றி மீளவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.
3. மனுதாரரின் விண்ணப்பமானது, 'கிடைக்கப் பெறாமைச் சான்றிதழுடன்' (Non-Availability Certificate) இணைக்கப்பட்டிருக்க வேண்டும். 'கிடைக்கப் பெறாமைச் சான்றிதழ்', அதிகார வரம்பிற்குட்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களிடமிருந்து கீழே பரிந்துரைக்கப்பட்ட அதிகாரி வாயிலாகப் பெறப்பட வேண்டும்:-

| நிகழ்வுப் பகுதி | அணுகப்பட வேண்டிய அதிகாரி |
|---|---|
| கிராம ஊராட்சி | வட்டாட்சியர்/ கிராம நிருவாக அலுவலர் |
| பேரூராட்சி | செயல் அலுவலர் |
| நகராட்சி | ஆணையர் |
| மாநகராட்சி | ஆணையர் |
| பாளையம் | செயல் அலுவலர் |

**குறிப்பு:** காலப்போக்கில், உள்ளாட்சி அமைப்புகளைத் தரம் உயர்த்துதல் அல்லது இணைப்பதன் காரணமாக, நிகழ்வு (பிறப்பு/இறப்பு) நடந்த இடம் மேலே

குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு தரம் உயர்த்தப்பட்ட / மாற்றப்பட்ட பகுதியுடன் இணைக்கப்பட்டிருந்தால், விண்ணப்பதாரர் தொடர்புடைய நிகழ்வுப் பகுதியின் தரம் உயர்த்தப்பட்ட பகுதியின் அதிகாரியை அணுக வேண்டும்.

**மனுதாரர் பின்வரும் ஆண்டுகளுக்கு 'கிடைக்கப் பெறாமைச் சான்றிதழைப்' பெற்று வழங்க வேண்டும்.**

i . பிறப்பு / இறப்பு நிகழ்ந்த ஆண்டு.
ii . பிறப்பு / இறப்பு நிகழ்ந்த ஓராண்டுக்கு முன்னர்.
iii . பிறப்பு / இறப்பு நிகழ்ந்த ஓராண்டுக்குப் பின்னர்.

4. காலதாமதமாக மேற்கொள்ளப்படுகிற பதிவுக்கான விண்ணப்பத்தை, மனுதாரர் ரூ.10/- மதிப்புள்ள நீதிமன்றக் கட்டண வில்லை ஒட்டப்பட்ட உறுதி ஆவணத்தில், கிடைக்கப் பெறாமைச் சான்றிதழ் மற்றும் பின்வரும் ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்:-

கிடைக்கப் பெறாமைச் சான்றிதழுடன் கூடுதலாக மனுதாரரால் (இருக்கிறவாறாக) அளிக்கப்பட வேண்டிய ஆதார ஆவணங்கள்:

**அ. பிறப்பை பதிவு செய்வதற்கு**

i. பிறந்த தேதி பதிவு செய்யப்பட்டள்ள மதிப்பெண் சான்றிதழ் மற்றும் இடமாற்றுச் சான்றிதழ்
ii. கடவுச்சீட்டு
iii. ஓட்டுநர் உரிமம்
iv. வாக்காளர் அடையாள அட்டை
v. ஆதார் அட்டை
vi. பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட பள்ளிப் பதிவுருக்களின் சுருக்கம்

**மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் கிடைக்கப் பெறவில்லையெனில்,**

மருத்துவமனையில் பிறப்பு ஏற்பட்டிருப்பின், மருத்துவமனைப் பதிவுரு.

வீட்டில் பிறப்பு நிகழ்ந்திருந்தால், குடும்பத் தலைவர் அல்லது வீட்டில் இருக்கிற குடும்பத் தலைவரின் நெருங்கிய உறவினர் மற்றும் அத்தகைய யாதொரு நபரும் இல்லாதபட்சத்தில், மேற்சொன்ன காலத்தில் அங்கிருந்த வயது முதிர்ந்த மூத்த ஆடவரிடம் பெறப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கை.

**ஆ. இறப்பைப் பதிவு செய்வதற்கு**

அடையாளச் சான்றாக:

i. இறந்தவர் மற்றும் வாழ்க்கைத் துணையின் ஆதார் அட்டை
ii. ஓட்டுநர் உரிமம்
iii. கடவுச்சீட்டு
iv. வாக்காளர் அடையாள அட்டை
v. குடும்ப அட்டை

மேற்குறிப்பிட்டவை நீங்கலாக, பின்வரும் ஆவணங்கள் இறப்புக்கான சான்றாக அளிக்கப்பட வேண்டும்:-

i. எரியூட்டு மைதான (சுடுகாடு) அறிக்கை. புதைக்கப்பட்டிருப்பின், இடுகாட்டுப் பொறுப்பாளரிடமிருந்து பெறப்பட்ட அடக்கச் சீட்டு.

ii. மருத்துவமனையில் மரணம் நிகழ்ந்திருப்பின், மருத்துவமனைப் பதிவுரு.

iii. விபத்து, கொலை, தற்கொலை மற்றும் ஆள் அரவமற்ற இடத்தில் ஏதேனும் சடலம் கண்டெடுக்கப்படின், முதல் தகவல் அறிக்கை (FIR) மற்றும் உடற் கூராய்வு அறிக்கையின் நகல்.

iv. வீட்டில் மரணம் நிகழ்ந்தால், குடும்பத் தலைவர் அல்லது வீட்டில் இருக்கிற குடும்பத் தலைவரின் நெருங்கிய உறவினர் மற்றும் அத்தகைய யாதொரு நபரும் இல்லாதபட்சத்தில், மேற்சொன்ன காலத்தில் அங்கிருந்த வயது முதிர்ந்த மூத்த ஆடவரிடம் பெறப்பட்ட எழுத்துப்பூர்வ அறிக்கை.

5. மனுதாரரால் அளிக்கப்பட்ட தகவல்கள் / ஆவணங்கள் தவறானவை என கண்டறியப்பட்டால், அத்தகைய தவறான தகவல்களை அளித்தமைக்காக இந்திய தண்டனைச் விதிக்கோவையின் பிரிவு 177 மற்றும் 199-இன்கீழ் அவர்மீது வழக்குத் தொடரலாம் என்பதற்கான எழுத்துப்பூர்வ சுய உறுதிமொழியை மனுதாரர் வழங்க வேண்டும்.

6. விண்ணப்பதாரரால் ஆவணங்கள் அளிக்கப்பட்டுள்ளனவா என்பதை வருவாய் கோட்டாட்சியர் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும். இந்த முதற்கட்ட ஆய்வுக்குப் பிறகு, இவ்விவரங்கள் தொடர்புடைய கிராம நிருவாக அலுவலருக்கு (சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை வருவாய் ஆய்வாளர்) அனுப்பப்பட வேண்டும். கிராம நிருவாக அலுவலர், நிகழ்வு/ஆவணங்களின் உண்மைத் தன்மையை விசாரித்து, இரண்டு வாரங்களுக்குள் அறிக்கையை வருவாய் ஆய்வாளருக்கும், வருவாய் ஆய்வாளர் ஒரு வாரத்தில் வட்டாட்சியருக்கும், வட்டாட்சியர் 2 வாரத்திற்குள் வருவாய் கோட்டாட்சியருக்கும் அறிக்கையை அனுப்ப வேண்டும்.

7. வருவாய் கோட்டாட்சியரிடம் மனுதாரர் விண்ணப்பத்தை அளிக்கும்போது, தொடர்புடைய பிறப்பு/இறப்பு நிகழ்வுகள் குறித்த விவரங்களை உள்ளூர் செய்தித்தாள்களில் வெளியிடுமாறு மனுதாரருக்கு உத்தரவிடப்பட வேண்டும். மேலும், மறுப்புரைகளைப் பெறுவதற்கான காலஅளவு அவ்வாறு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஆகும். அவ்வாறு வெளியிடப்பட்டதற்கான ஆதாரத்தை வருவாய் கோட்டாட்சியர் விசாரணையின்போது நேரடியாக அளிக்க வேண்டும்.

8. கிராம நிருவாக அலுவலரிடமிருந்து விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், வருவாய் கோட்டாட்சியர் விண்ணப்பதாரரையும்,

விசாரணைக்குத் தேவைப்படுகிற ஏனைய சாட்சிகளையும் விசாரணைக்கு வருமாறு அழைத்து, வருவாய் கோட்டாட்சியர் திருப்தி அடையும்பட்சத்தில் பிறப்பு / இறப்பினை பதிவு செய்து அல்லது விண்ணப்பத்தினை நிராகரித்து ஆணைகளைப் பிறப்பிப்பார். விண்ணப்பதாரரிடமிருந்து தேவையான அனைத்து ஆவணங்களும் பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் வருவாய் கோட்டாட்சியர் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

9. வருவாய் கோட்டாட்சியர், மேற்படி பதிவு செய்யப்பட வேண்டிய தொடர்புடைய பதிவாளரை அணுகுமாறு குறிப்பிட்டு, அதிகார வரம்பிற்குரிய பகுதி தொடர்புடைய கணக்குத் தலைப்பில் காலதாமதக் கட்டணம் ரூ.500/- செலுத்துவதற்கு காலதாமதமாக மேற்கொள்ளப்படுகிற பதிவுக்கான ஆணையை விண்ணப்பதாரருக்கு தெரியப்படுத்த வேண்டும். காலதாமதமாக மேற்கொள்ளப்படுகிற பதிவு ஆணையின் நகல், அதிகார எல்லைக்குட்பட்ட பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளர், மாவட்ட வருவாய் அலுவலர் (மாவட்டப் பதிவாளர்) மற்றும் வருவாய் மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் (கூடுதல் மாவட்டப் பதிவாளர்) ஆகியோருக்கு அனுப்பப்பட வேண்டும்.

**10. தத்தெடுத்தல்:**

மத்திய தத்தெடுப்பு வள ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் வாயிலாகத் தத்தெடுக்கப்படும் நேர்வில், மாவட்ட மாஜிஸ்திரேட்டு உத்தரவின் அடிப்படையில் (2022-ஆம் ஆண்டு தத்தெடுப்பு ஒழுங்குமுறைகளின்படி) தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் பிறப்பு பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.

உறவினர்கள் அல்லது தெரிந்தவர்களுக்குள் குழந்தை தத்தெடுக்கப்பட்டால், தத்தெடுக்கப்பட்ட குழந்தை தொடர்பான பதிவு முறையான தத்தெடுப்பு ஆவணத்தில் சார்-பதிவாளர் முன்னிலையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

தத்தெடுக்கப்பட்ட குழந்தையின் பிறப்பு (உறவினர்கள் அல்லது தெரிந்தவர்களுக்குள் தத்தெடுப்பு) பதிவு செய்யப்படவில்லை என்றால், நிருவாக நடுவர் (வருவாய் கோட்டாட்சியர் பதவி நிலைக்கு குறையாத) அவர்களால் காலதாமதமாகப் பதிவு செய்வதற்கான நடைமுறையின்படி பதிவு செய்யப்பட வேண்டும்.

**11. மேல்முறையீடு:-**

வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த ஆணைக்கெதிராக, ஆணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து, 60 நாட்களுக்குள், மாவட்ட வருவாய் அலுவலரிடம், ஆணைகளை மறுபரிசீலனை செய்ய, பாதிக்கப்பட்ட நபர்கள் மேல்முறையீடு செய்யலாம். மாவட்ட வருவாய் அலுவலர் விண்ணப்பதாரரையும், விசாரணைக்குத் தேவைப்படுகிற ஏனைய சாட்சிகளையும் விசாரணைக்கு வருமாறு அழைத்து, மாவட்ட வருவாய் அலுவலர் திருப்தி அடையும்பட்சத்தில் பிறப்பு / இறப்பினை பதிவு செய்து அல்லது விண்ணப்பத்தினை நிராகரித்து ஆணைகளைப் பிறப்பிப்பார். விண்ணப்பதாரரிடமிருந்து தேவையான அனைத்து

ஆவணங்களும் பெறப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மாவட்ட வருவாய் அலுவலர் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

12. பொதுவான அறிவுறுத்தல்கள்

1. வருவாய் கோட்டாட்சியரால் பிறப்பிக்கப்படும் காலதாமதமாக மேற்கொள்ளப்படுகிற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுக்கான ஆணைகளுக்கென தனி பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும்.

2. விண்ணப்பதாரர் பணியமர்த்தத்தின்போது அளித்த பிறப்புச் சான்றிதழ்/பள்ளிச் சான்றிதழ்/வயதுச் சான்றிதழில் ஏற்கெனவே வயதைப் பதிவு செய்திருந்தால், வருவாய் கோட்டாட்சியர் வயது திருத்தம் செய்ய முற்படக் கூடாது.

3. ஏழு ஆண்டுகளாக காணாமல் போனவர்கள் குறித்த நேர்வில், இறப்பு குறித்து சிவில் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் காலதாமதமான இறப்பு பதிவு செய்யப்பட வேண்டும்.

4. உண்மையை மறைத்து காலதாமதமான பதிவு ஆணை பெறப்படும் நேர்வில், வருவாய் கோட்டாட்சியர் அதை இரத்து செய்து, அத்தகைய இரத்து ஆணையை கூடுதல் மாவட்டப் பதிவாளருக்கு (வருவாய் மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர்) அனுப்ப வேண்டும்.

குமார் ஜெயந்த்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

ஒம்/-
பிரிவு அலுவலர்

//உண்மை நகல்//

நா. கவிதா 25/4/2024
பிரிவு அலுவலர்

கி.கு. 25/4/24.